1986 நவம்பர் 25] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

இந்த ஆலையினை அரசு ஏற்று நடத்தும் கருத்து ஏதும் பரிசீலனையிலில்லை. ஆனால் இந்நூற்பாலையை ''விடுவிப்பு நிறுவனமாக'' அறிவிக்க கோரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

(குறுக்கீடுகள், கூச்சல். குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு என்னை ஆளாக்கும்படி வைக்கிறீர்கள். I want to have a smooth running of the House.

(ஓ) கோவை மாவட்டம் ஆதிவாசிகள் பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு திரு. மா. சின்னராசு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சரின் சார்பாக, மாண்புமிகு வீட்டுவசதி துறை அமைச்சர் அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

ஊரக நிலமற்றோர், வேலை வாய்ப்புத் திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் போன்ற மத்திய அரசு உதவித் திட்டங்கள் மூலமும், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் மூலமும், வீடுகள் கட்டுவது; குடிநீர் வசதி, சாலைகள் போடுவது, மருத்துவ வசதிகள் செய்து கொடுத்தல் போன்ற அடிப்படை வசதிகளை நிறைவேற்றுவதை மாநில வனத்துறை அதிகாரிகள் தடுத்து நிறுத்துவதாகக் கூறப்படுவது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும்.

ஒதுக்கக் காட்டில், எந்தவித வனவளர்ச்சி சம்பந்தப்படாத வேலைகள் செய்ய வேண்டியிருந்தாலும், 1980-ம் ஆண்டு வனக் காப்பு சட்ட விதிகளின்படி, மைய அரசின் முன் அனுமதி பெற வேண்டும். இதற்காக, வன அலுவலர்கள் வனவளர்ச்சி சம்பந்தப்படாத பொருள்பற்றி ஆய்வு செய்து தக்க கருத்துருவை மாநில அரசு மூலம் மைய அரசுக்கு அனுப்பவேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட வேலைகள் எல்லாம் வன வளர்ச்சி சம்பந்தப்படாமலும், ஒதுக்கக்காடுகள் எல்லைகளுக்குள்ளும் இருப்பதால், அவ்வேலைகளை செய்வதற்கு, 1980-ம் ஆண்டு வனப்பாதுகாப்புச் சட்ட விதிகளின்படி வேண்டிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு, தக்கதொரு கருத்துரு மைய அரசுக்கு அனுப்பவேண்டும். அதன்படி, கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:—

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1986 நவம்பர் 25

(i) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கோவை மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் சரக கோப்பநாரி ஒதுக்கக் காட்டில் கோவை மாநகராட்சி, 20 பேரூராட்சி, 476 குக்கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க முன்னோடி நிலஅளவு செய்வதற்காக அனுமதி கோரி விண்ணப்பித்ததின் பேரில், 31-12-1986 வரை மேற்கூறிய முன்னோடி நில அளவினை செய்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டு, இந்த வேலை தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக செய்யப்பட்டு வருகிறது.

(ii) காரமடை பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், 1985-86-ம் ஆண்டில் காரமடை வட்டாரம் குண்டூர், பரளிக்காடு, ரெண்டை மலைவாழ் ஆதிவாசிகளுக்கு குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கு அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தார். கோவை மாவட்ட வன அலுவலர் மேற்படி கோரிக்கையை ஆய்வு செய்து, மைய அரசின் ஒப்புதலைப் பெறவேண்டும் என்று கூறியுள்ளார்.

(iii) பில்லூர் அணை பழங்குடியினருக்கு அடிப்படை வசதிகள் செய்துகொடுப்பது குறித்தும், ஒரு கருத்துரு கோவை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கிடைக்கப்பெற்றது. இந்தக் கருத்துருவினை செயலாக்க, 1980-ம் ஆண்டு வனப்பாதுகாப்புச் சட்ட விதிகளின்படி, மத்திய அரசின் ஒப்புதல் கோர முழு விவரங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடமும், மாவட்ட வன அலுவலரிடமும் கேட்கப்பட்டு, அவைகள் எதிர்பார்க்கப்படு கின்றன.

(iv) ஆதிவாசிகள் செட்டில்மெண்டுக்கு செல்லும் சாலை களை பராமரிப்பது மற்றும் புதிய சாலைகள் அமைப்பது குறித்து நெடுஞ்சாலைத் துறையினர் கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் பிரேரணை அனுப்பியிருக்கின்றனர். மத்திய அரசுக்கு வழங்கப்படவேண்டிய விபரங்கள் அனைத்தும் கொடுக்கப் படாமல் இருந்ததால், நெடுஞ்சாலைத் துறையினரால் அனுப்பி வைக்கப்பட்ட பிரேரணையை, முழு விபரங்களுடன் திருப்பி அனுப்பும்படி கோரப்பட்டுள்ளது. அவர்களது முழு அறிக்கை விபரங்களுடன் கிடைத்தவுடன், மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுவாக மலைவாழ், ஆதிவாசியினருக்குத் தேவையான அடிப்படை வசதிகளான குடியிருப்புகள், சாலை அமைத்தல், குடிநீர் வசதி போன்ற வசதிகளை செய்து கொடுப்பதில் வனத் துறை எப்போதும் ஆட்சேபணை செய்தது கிடையாது.

திரு. கு. **சுப்பராயன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நாங்கள் எதிர்க்கட்சிகளுக்காக பேச வேண்டாமா? விவசாயி களுக்காக பேச வேண்டாமா?......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவசாயிகளுக்காக நீங்கள் பேசவில்லை. நீங்கள் அடம் பிடிக்கிறீர்கள். இது முறையல்ல,

(கூச்சல்-குழப்பம்)